Tamil Heritage Foundation International Digital Library EBook collection



# மெய்வாழ்க்கை கண்டறிந்த வேந்தன்.

## புத்தர் ஞானம்.

(முருகதாஸன் எழுதுகிறார்)

உடனே கௌதமபுத்தர் தலை வணங்கி ஜனங்கள் முன்பாக பின்வருமாறு சொன்னார்:—நான் நிச்சயமாகப்போவேன்; இது என் கடமை; என் விருப்பமாகவுமிருக்கிறது. நமக்கு இவ்வுயிர் கிடைத்திருப்பதினால்தான் அல்லவோ நாம் தருமத்தை யனுசரித்து முன் செய்த பாவங்களைத் தீர அனுபவித்துத் தொலைத்து அவைகளுக்கு ஒன்றும் புதிதாகச் சேர்க்காமல் பூரண அன்பினாலும் அன்பாகிய செயல்களினாலுமே வாழ்வை நிரப்பி இனி ஜனன மரணத்தை யடையாமலிருக்க ஏதுவாயிருக்கிறது. ஆனதினால் ஒருவனும் தனக்கு இவ்வுயிரைக்கொடுத்தவர்களுக்கு மரியாதை செய்யத் தவறாதிருக்கட்டும். நான் இப்பொழுதே புறப்படுவதாக அரசனும் இளவரசியும் அறியட்டும் என்றார்.

இது அந்நகருக்கெட்டியதும் அந்நகரமும் அதின் சுற்றுப்புறமுள்ள ஊர்களும் அல்லோல கல்லோலப்பட்டன. அந்நகரத்தின் தெற்கு வாயிலில் அழகாகச் சித்தரிக்கப்பட்ட ஒரு மண்டபம் இயற்றப்பட்டது. வீதிகளெல்லாம் வெண்மணல் விரித்து வாழை கமுகுகள் வைத்து மகா தோரணங்கள் நாட்டப்பட்டன. எங்குபோனாலும் பன்னீரும் சந்தனமும் வாரியிறைக்கப்பட்டு பரிமளம் வீசிக்கொண்டிருந்தது. ஒவ்வோரிடத்திலும் கொடிச் சேலைகள் காற்றில் அசைந்துகொண்டிருந்தன. மேலும் புத்தர் வரும் தினத்தன்று வெள்ளியம்பாரிகளுடன் பொற் பூண் கட்டிய தந்தங்களுடைய யானைகள் இத்தனை யித்தனை அவன் ஆற்றைக் கடக்கும்போது காத்திருக்க வேண்டுமென்றும், இன்னின்ன விடங்களில் இளவரசன் வருகிறான் என்று முரசு முழங்கவேண்டுமென்றும், இன்னின்ன மூலைகளில் பிரபுக்கள் காத்திருந்து மரியாதை செய்ய வேண்டுமென்றும் மற்றும் வாத்தியக்கூட்டம் நாட்டியக்கூட்டம் முதலியவைகளும் புஷ்பமாரி பொழியத் தக்க ஸ்திரீகளும் ஆங்காங்கு ஏற்பாடு செய்து அவன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

யசோதரை எல்லார்க்கும் முந்தியிருக்கவேண்டுமென்ற ஆவலுடன் நகர மதில்களுக்கு வெளியே புதிதாக மண்டபங்கட்டப்பட்டிருந்த இடத்திற்கு வந்துசேர்ந்தாள். அம் மண்டபத்தின் ஒருபக்கமாக பசுமையான மரங்களும் புதிதாகச் செதுக்கப்பட்டு வளர்ந்த பாறைகளும் பழக்கொடிகளும் புஷ்பச்செடிகளும் வளர்கின்ற மேடைகளும் நிறைந்துள்ள நிக்ரோதம் என்ற வனம் நெடுந்தூரம் பரவியிருந்தது. நகரத்தினின்று வெளியே போகும் பாதை இவ்வனத்தில் ஒரு ஓரமாகப் போயிற்று. அப்பாதையின் மற்றொரு பக்கத்தில் அரசர்க்கும் அந்தணர்க்கும் அருகிற்கூடப்போக முடியாத சண்டாளர்களின் குடிசைகளிருந்தன. ஆயினும் அவர்களும் காலையிலெழுந்து கோயில் மத்தளமோ யானைப் பறையோ கேட்டவுடன் வழியைப் பார்ப்பதும் மரங்களிலேறுவதும் ஒருவரும் வாராதது கண்டு வாசலைப்பெருக்குவதும் வாசலில்போடப்பட்டிருந்த பச்சைப் பந்தர்களின் வாடிப்போன தழைகளை யெடுத்து புதியவைகளை வைக்கிறதும் அடிக்கடி வழிப்போக்கர்களை சித்தார்த்தன் வருவதைப்பற்றி பேச்சுண்டாவென்று கேட்பதும் இப்படி இவர்களும் மிகு ஆவலுடன் காத்துக்கொண்டிருந்தார்கள். யசோதரையும் இதையெல்லாம் பார்த்து அவர்களைப்போலவே சித்தார்த்தனைப் பற்றி சமாச்சாரம் வருமாவென்று காத்துக்கொண்டிருந்தாள்.

அப்பொழுது ஒருவர் தலையை நன்றாகச் சிரைத்து ஆண்டிகள்போற் காவி வஸ்திர முடுத்து கையிற் சுரைக்குடுக்கைபோன்ற மண்பாத்திரமொன்றைப் பிடித்து மெல்ல நடந்து வருவதைக் கண்டாள். அவர் அப் பாத்திரத்தை ஒவ்வொரு குடிசை வாயிலிலும் நீட்டிக் கொடுத்தவர்களுக்கு மெதுவாக வந்தனமளித்து கொடாத வீடுகளைக்கவனியாமற் போய்க்கொண்டிருந்தார். அவரை அவர்போற் காவி வஸ்திரமணிந்த இருவர் தொடர்ந்தார்கள். ஆனால் கையில் மண்பாத்திரம் கொண்டுபோனவருடைய உருவத்தில் ஒரு பிரபுத்துவமும் கண்டவர் உடனே மரியாதை செய்யும் பெருந்தன்மையும் விளங்கிற்று. அவரிருந்த விடத்திலேயே ஒரு மேன்மை விளங்கியிருந்தது. அவர் நடையிலும் பார்வையிலும் விசேஷ சக்தி தோன்றிற்று. அதனால் அவருக்குப் பிச்சை போடுகிறவர்களெல்லாம் பய பக்தியுடன் வணங்கினார்கள். சிலர் தாம் ஏழையாயிருப்பினும் இன்னும் இவருக்கு ஏதேனும் கொடுக்க உண்டோவென்று பார்க்க வீட்டை நோக்கி ஓடினார்கள். அதிசீக்கிரமாக ஆண் பெண் சிறு குழந்தை முதலாகக் கூடி அவரைத்தொடர்ந்து இவர் யார் இவ்வளவு தெய்வத்தன்மை பொருந்திய துறவியும் இங்கு இருக்கிறாரோ என்று ஒருவர்க்கொருவர் மெல்லப் பேசிக்கொண்டார்கள். இப்படி அவர் நகர வாயிலில் வரும்பொழுது அங்கியற்றப்பட்டிருந்த மண்டபத்தின் கதவு திறக்கப்பட்டது. உடனே யசோதரை உள்ளிருந்து வெளியே வந்து அவர் முன் நின்று சித்தார்த்த என் நாதா! என்று கண்ணீர் பெருகக் கதறியழுது கொண்டு அவர் காலில் விழுந்து கிடந்தாள்.

இப்படி சித்தார்த்தன் தலையை மொட்டையடித்துக்கொண்டு ஆண்டிகளைப்போல் காவி வஸ்திர முடுத்து ஈன ஜாதிகளிடமும் கையேற்றம்பு சித்து வருகிற செய்தியை அரசன் கேட்டதும் விசனமும் கோபமும் அவன் மனதிலுள்ள பேரன்பை மாற்றிவிட்டது. மீசை பட படவென்று துடிக்க கண்களிற் தீப்பொறி பறக்க தாடியைப் பிடித் திழுத்துக் கொண்டு எழுந்து அவரது கோபத்தைக் கண்டு நடுநடுங்கி பிரபுக்கள் பின் வர புருவமிரண்டும் ஒன்று சேரும்படி நெறித்துக்கொண்டு தன் குதிரைமேற்றாவி இருபுறமும் இரத்தம் புறப்பட அதைக் குத்தி அரசன் வருகிறானென்று ஜனங்கள் விலகுவதற்குக்கூட இடமில்லாத வீதியின் வழி விரட்டிக்கொண்டு போனான். நகரத்தின் தெற்கு வாயில் திரும்புமிடத்து உள்ள கோயிலினருகில் ஒரு பெரிய கூட்டம் இவன் வேகத்தைத்தடுத்து ஒவ்வொரு தெருவிலும் ஜனங்கள் வந்துகொண்டிருந்ததால் கூட்டம் அதிகரித்துக்கொண்டேயிருந்தது. அங்கே குதிரையை விட்டிறங்கி கூட்டத்திற்குள் நடந்துசெல்ல அங்குபுத்த முனியைக்கண்டான். கௌதமபுத்தரும் சாந்தமான பார்வையுடன் அரசனை வணங்கவே அவனது கோபமெல்லாம் சூரியனைக் கண்ட இருள்போல் நீங்கிற்று. புத்தரது முகத்தில் விளங்கின மண்ணாசர்க்கரிதான பெருந்தன்மையையும் இப்படி மனிதரையெல்லாம் கூட்டமாகப் பின்தொடரச் செய்த பிரபுத்துவத்தையும் பரிசுத்தத்தையும் கண்ணாரக்கண்டு களிப்பதே ஒரு பெரிய பாக்கியமாகத் தோன்றிற்று. ஆயினும் அரசன் விசனத்துடன் தன் மகனைப்பார்த்துப் பின்வருமாறு பேசினான்.

---

# ஸத்திய தரிசனம்.

## மகாத்மா காந்தியின் ஜீவிய சரித்திரம்.

3-ம் பாகம். அத்தியாயம் 1.

மகாத்மாகாந்தி யங் இந்தியா பத்திரிகையில் எழுதுவதாவது:—

நான் என் மனைவியுடனும் குழந்தைகளுடனும் பிரயாணம் செய்தது இது தான் முதலாவது தடவை. நடுத்தர வகுப்பு ஹிந்துக்களுள் பால்ய விவாகங் காரணமாகப் புருஷர்கள் அதிகப் படிப்பில்லாதவர்களாயிருக்கையில் மனைவி இன்னும் படிப்பேயில்லாதவளாக இருப்பதாயும், மனைவிக்கு ஆசிரியனாக அமைந்துவிடும் புருஷனுடைய வாழ்விலிருந்து மனைவியின் வாழ்வு மிகவும் வேறுபட்டிருப்பதாயும் நான் இதில் அடிக்கடி கூறியிருக்கிறேன். ஆகையால் என் மனைவி, குழந்தைகள் இவர்கள் உடுத்திக்கொள்ள வேண்டிய ஆடைகளைப்பற்றியும், அவர்களுடைய ஆகாரம் எப்படியிருக்க வேண்டுமென்றும், புதிய பிரதேசத்தில் அவர்களுடைய பழக்க வழக்கங்கள் எவ்வாறு இருக்க வேண்டுமென்றும் நான் நன்றாக யோசித்து திட்டம் போடவேண்டியிருந்தது. அந்த நாட்களில் நடந்த சிலவற்றை நான் இப்போது நினைத்துக்கொள்ளும்போது ஒரு வேடிக்கையான உணர்ச்சி தோன்றுகிறது. ஒரு ஹிந்து மனைவி, தாம் கணவனுக்குக் கீழ்ப்படிவதே மதத்தின் சிறந்த கொள்கையெனக் கருதுகிறாள், ஒரு ஹிந்து புருஷன் தாம் தமது மனைவியின் எஜமானனென்றும் அவள் எப்போதும் தான் கூறுகிறபடியெல்லாம் நடக்கவேண்டுமென்றும் கருதுகிறான்.

இந்த சரித்திரத்தை யெழுதும் அந்தக்காலத்தில், நாம் நாகரீகமடைந்தவர்களெனக் கருதப்படவேண்டுமானால் நமது நடை உடைபாவனைகள் கூடியவரையில் ஐரோப்பியர்களுடைய நடை உடை பாவனைகளுக்குச் சமமாகவிருக்கவேண்டுமென்று நான் கருதினேன். அப்படிச் செய்தால்தான் நமக்குக் கொஞ்சமாவது செல்வாக்கு ஏற்படுமென்றும், செல்வாக்கு இல்லாமல் நமது வகுப்பிற்கு உதவியெதுவும் செய்யமுடியாதென்றும் நான் கருதினேன்.

அவ்வாறே நான் என்னுடைய மனைவி, குழந்தைகள் முதலியவர்களின் உடைகளைத் திட்டம் செய்தேன். அவர்கள் கத்தியவார் வணிபர்களென்று தெரியும்படி செய்ய நான் எவ்வாறு விரும்புவேன்? அப்போது இந்தியர்களுக்குள்ளாகப் பார்ஸி வகுப்பினர்தான் மிகவும் நாகரீகமடைந்தவர்களென்று கருதப்பட்டது. ஆகவே பூரா ஐரோப்பிய முறை பொருந்தாத விஷயங்களில் பார்ஸிகளின் வழக்கங்களை நாங்கள் பின்பற்றினோம். அதன்படி என் மனைவி பார்ஸிகளின் புடவையைக் கட்டிக்கொண்டாள். என் பிள்ளைகள் பார்ஸிகளைப்போல் கால் சட்டை மேல் சட்டை முதலியவற்றைத்தரித்துக்கொண்டனர். மேஜோடு பூட்ஸ் முதலியவை தரிக்காமல் ஒருவருமிருக்கமுடியாது. என் மனைவியும் குழந்தைகளும் இவற்றை யணிந்து பழகுவதற்கு வெகு காலமாயிற்று. பூட்ஸ்கள் அவர்களுடைய கால்களில் ரத்த ஓட்டத்தைக்கட்டுப்படுத்தி ஒரு விதவலியை உண்டுபண்ணின. மேஜோடுகள் வியர்வை நாற்றமடித்தன. கட்டைவிரல்கள் அடிக்கடி புண்ணாகிவிட்டன. இந்த ஆக்ஷேபங்களுக்கெல்லாம் நான் எப்போதும் பதில் வைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் என்னுடைய பதில்கள் அவர்களுக்குத் திருப்தியளித்துவிடவில்லை யென்றும் என்னுடைய அதிகாரம்தான் அவர்களை அடக்கிவைத்திருந்ததென்றும் எனக்குத் தோன்றியது. வேறு வழியில்லாததால் அவர்கள் உடைகளில் மாறுதல் செய்யச் சம்மதித்தனர். அதே உணர்ச்சியுடன், ஆனால் சிறிதும் விருப்பமின்றி, சாப்பிடும்போது கத்தி சூலம் முதலியவற்றை உபயோகித்தனர். நாகரீகத்தின் இந்தச் சின்னங்களில் எனக்கிருந்த பிரேமை நீங்கியவுடன் அவர்கள் கத்தி சூலம் முதலியவற்றை விட்டு விட்டனர். நீண்டகாலம் இவ்வழியில் பழகிவிட்டு மீண்டும் பழைய முறைக்குச் செல்லுவது கடினமாகத்தானிருந்தது. ஆயினும் இந்த "நாகரீகத்தின் வேஷத்தை" விட்டபின் நாங்கள் இன்னும் அதிக சுயேச்சையாகவும் சௌகரியமாகவும் இருக்கிறோமென்பதை நான் இப்போது நன்றாகப் பார்க்கிறேன்.

நாங்கள் சென்ற கப்பலிலேயே சில உறவினர்களும், பழக்கமான சிலரு மிருந்தனர். இவர்களையும் இதர பிரயாணிகளையும் நான் அடிக்கடி சந்தித்தேன். அந்தக் கப்பல் என்னுடைய கட்சிக்காரருக்கும் நண்பருக்கும் சொந்தமானதால் நான் அதில் எங்கும் தாராளமாகச் செல்லமுடிந்தது.

கப்பல், மத்தியில் உள்ள துறைமுகங்களில் தங்காமல் நேராக நேட்டாலுக்குச் சென்றதால் எங்கள் பிரயாணத்திற்கு 18 தினங்கள் தான் பிடித்தது. ஆனால் கரையில் இறங்கியவுடன் நடக்கவிருந்த போராட்டத்திற்கு முன் அடையாளமாக நேட்டாலிலிருந்து நான்கு நாள் பிரயாண தூரத்தில் கப்பலிருக்கும்போதே கடலில் பெரிய புயல் அடித்தது. தென் கோளத்தில் டிசம்பர் மாதம் கோடை காலமாகும். அதோடு பருவக் காற்றும் அடிக்கும் காலமாகும். ஆகையால் தென் கடல்களில் புயற்காற்று அடிப்பது ஸஹஜமாக விருந்தது. எங்களைச் சூழ்ந்துகொண்ட புயல் கடுமையாகவிருந்ததோடு அதிக காலமும் அடித்தது. அதனால் பிரயாணிகள் பயந்து விட்டனர். அது ஒரு கம்பீரமான காக்ஷியாக விருந்தது. பொதுவான கஷ்டம் ஏற்பட்டதால் எல்லாரும் ஒன்றுபட்டு விட்டனர். முஸல்மான்கள், ஹிந்துக்கள், கிறிஸ்தவர்கள் முதலிய எல்லாரும் தங்களுடைய வேற்றுமைகளையெல்லாம் மறந்து ஒரே கடவுளைப்பற்றி மாத்திரம் தான் நினைத்தனர். சிலர் பெரிய சபதஞ்செய்து கொண்டனர். பிரயாணிகள் பிரார்த்தனை செய்வதில் கப்பல் தலைவரும் சேர்ந்துகொண்டார். புயல் அபாயமற்றதாக இல்லாவிடினும் இதைவிட இன்னும் அபாயகரமானவற்றைத் தாம் அனுபவித்திருப்பதாயும் நன்றாகக் கட்டப்பட்ட கப்பல் எந்தப் புயலையும் சமாளித்துக் கொள்ளுமென்றும் அவர் பிரயாணிகளுக்கு விளக்கினார். ஆனால் இதெல்லாம் அவர்களுக்குத் தைரியமளிக்கவில்லை. ஒவ்வொரு நிமிஷமும் தோன்றிய சப்தங்களால் கப்பல் உடைந்துவிடுமோ வென்ற பயம் அதிகரித்துக்கொண்டேவந்தது. கப்பல் அதிகமாகச் சாய்ந்து ஆடியதால் எந்த நிமிஷமும் கவிழ்ந்துவிடக் கூடுமென்று தோன்றியது. ஆகையால் அச்சமயத்தில் மேல் தளத்தில் எவரும் தங்குவது அசாத்தியமாக விருந்தது. ஆண்டவன் அருட்படி நடக்கும் என்ற கோஷம் தான் ஒவ்வொருவருடைய வாயினின்றும் கிளம்பியது. நாங்கள் இம்மாதிரி 24-மணி நேரம் தவித்திருக்க வேண்டுமென்று எனக்குத் தோன்றினது. கடைசியில் வானம் சுத்தமாகச் சூரியன் தோன்றியது. புயல் தீர்ந்துவிட்டதென்று கப்பல் தலைவர் கூறினார். மீண்டும் ஜனங்களுடைய முகத்தில் சந்தோஷக்குறி தோன்றியது. அபாயம் நீங்கியவுடன் கடவுளின் பெயரும் வாக்கிலிருந்து நீங்கிவிட்டது. சாப்பிடுவது, குடிப்பது, பாடுவது, உல்லாசமாகக் காலங் கழிப்பது முதலியவை மீண்டும் ஸஹஜமாகிவிட்டன. உயிர் போய்விடுமோ வென்ற பயம் போய்விட்டதால் அந்த நெருக்கடிக்காகத் தோன்றிய பிரார்த்தனை மனோபாவமும் மறைந்து மாயைக்கிடம் கொடுத்துவிட்டது. வழக்கப்படியான நமாஸ், பிரார்த்தனை முதலியவை நடந்தது வாஸ்தவம்; ஆனால் அந்த நெருக்கடியான சமயத்தில் தோன்றிய காம்பீரம் பிறகு இல்லை.

ஆனால் அந்தப் புயல் என்னைப் பிரயாணிகளுடன் ஒன்றுபடுத்திவிட்டது. எனக்கு அந்தப் புயலைக்கண்டு பயமே ஏற்படவில்லையெனக் கூறலாம். ஏனெனில் எனக்கு இம்மாதிரிப் பழக்கமாகிவிட்டது. நான் நல்ல கடல் பிரயாணி; எனக்குக் கப்பலில் செல்லுவதால் ஏற்படும் வியாதி வருவதில்லை. ஆகையால் நான் பயமின்றிப் பிரயாணிகளிடம் சென்று அவர்களுக்குத் தைரியம்

(இதன் தொடர்பு 7-ம் பக்கம் பார்க்க.)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## தமிழ்ச்சங்கமும், கல்லூரியும்.

செந்தாய்ப் பாஷையின் முன்னேற்றத்தைக் கருதியும் ஒரு தேசம் விருத்தியாவதற்கு அத்தேசத் தாய்ப்பாஷை முன்னேற்றமடைவதே முதற்காரணமென்பது பற்றியும் நம் சுயபாஷையில் செறிந்துள்ள நுண்ணிய கருத்துக்களைத் தமிழ்மக்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் ஆராய்ச்சி செய்யவேண்டிய அவசியமென்பது சொல்லவேண்டியதன்று. இவ்வாராய்ச்சியிற்றலைப்பட்டுத் தம் வாணாளைத் தமிழ்த் தாய்க்குத் தத்தம் செய்தோர் சிலர். தாமாகவே சில அல்லது பல நூற்களை ஆராய்ந்து வீட்டிமட்டுமாக உட்கார்ந்து காலங்கழிப்பவர் பலர். சீடர்கள் சேர்த்துத் தமக்குத் தெரிந்ததை ஓதிவைக்குந் தொழில்கொண்டார் சிலர். யாவரும் தமிழ்த்தாய் மீது அபிமானங்கொண்டவரேயாயினும் மேருப்பருவதம் போன்று, உலகறியுமாறு தம்மை வித்துவான்கள் எனத் தெரிவித்துக் கொள்வாராயின் கல்வி கற்க விரும்பும் சிறுர், பெரியர், எளியர், வலியார், யாவருக்கும் இப்பெரியார்கள் தெரிந்தும் பயன்படுவோர் எனும் நோக்கங்கொண்டே மேதைகள் குழுமிய சங்கங்களாய் பாஷை அபிவிருத்தியைக் கோரிப் பரீக்ஷைகள் நடத்தப்பெற்று யோக்கியதாபத்திரங்கள், பதக்கப்பரிசுகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இவ்வண்ணமாகத் தற்போது நடத்திவருபவைகளுள் சிறந்து விளங்குவன 1. மதுரைத்தமிழ்ச்சங்கம், 2. சிதம்பரம் மீனாட்சிகலாசாலை, 3. திருநெல்வேலி சென்னை சைவசித்தாந்தக்கழகம் இம்மூன்றுமேயாகும்.

இம்மூவரும் வருடத்திற் கொருமுறையாக ஏராளமான நூற்களைக் குறிப்பிட்டுப் பரீட்சை நடத்திவருகிறார்கள். இன்னவர்களைத் தற்கால நிலைமைக்கேற்கப் பொருத்த தமியேன் வேண்டிக்கொள்வதொன்றுண்டு. வருடமொருமுறை பரீட்சை எழுதப் பிரயாசப்படும் ஒவ்வொருவரும் கிட்டத்தட்ட 50 ரூபாய்க்குப் புத்தகங்கள் வாங்கவேண்டியதுண்டு. உலகமோ செல்வந்தரும் எளியவர்களும் கலந்துள்ளதாக விருக்கிறது. அதிலும் நம நாடு தற்போது பரதேசிகள் ஆட்சியுள் ஆழ்ந்து, பரதேசப்பாஷை மோகத்துள் அழுந்தி, பரதேசப் பழக்கவழக்கத்தையே நாகரீகமாகக் கைக்கொண்டு, பரதேசியத்தையே பருகும் இக்காலத்து தன் தேயம் என்கிற அபிமானமும், தன் தாய்ப்பாஷை என்கிற எண்ணமும் தன் தாய்க்குத் தொண்டு புரிதல் என்கிற எண்ணமும் கொண்டுள்ளார் சிலரே. இச்சிலரும் வறுமை விடாதுவருவேன் எனமேலும், மேலும் வளரும் இக்காலத்தில் தன்கும்பிக்கு எட்டுதலை விட்டு அபிமானத்தோடு வாசிக்க ஆரம்பித்து விடின் சித்திரத்தை ஆகாயத்தில் வரைந்து அதன் நேருக்குச் சுவரை நிறுத்துவோம் என்ற யோசனைக்குள்ளாகுபவர் கதியை அடைய நேரிடுகிறது. மிடிமலிந்தவிக்காலம் எளியவரோருவர் 50 கையிலிருந்து புஸ்தகங்கட்காக வெளியில அனுப்பச்சம்மதிப்பர்? அதையும் பொறுத்து, தமது சொற்ப வருமானத்தைப் பரீட்சைக்குப் பாடப் புத்தகங்கள் வாங்குவதில் உபயோகப்படுத்திவிட்டாலோ, வீடு பட்டினியிருக்க நேருகிறது. இவ்வித அவஸ்தைக்குள்ளாகி, பெரும்பாலர் கற்தெட்சண பூமியிலே வளாவிருந்து மாளுகின்றனர். கற்கப்பிரியப்படுகிறவர்களும் செல்வவளமின்மையால், தந்தம்பாட்டனர், முப்பாட்டனர் காலத்துவாங்கிவைத்துள்ள அம்மானை, அல்லி, பவளக்கொடிமாலை முதலியவைகளை இசைஇழுத்துவிட்டுப்பேசாதிருந்துவிடுகின்றனர். ஆவல்மிகுதியாய்வளர்கிறதே ஒழிய அதைத்தவிர்க்கும் வழி அறிகிறதில்லை. இஃதிவ்வாறாக புஸ்தகங்கள் வாங்கச் செல்வம் படைத்தவர்களுள் பெரும்பாலர் சிரமத்தைக் கவனிப்பின் அவர்கள் தமிழ் ஆர்வமேலீட்டால் பரீட்சைக்குரிய விடயக்குறிப்பைப்பார்த்த உடன் ஆ, அப்பா, கிட்டத்தட்ட 3000 பாட்டுகள் படிக்கவேண்டியதிருக்கிறதே; இது எவரால் முடிக்கவித்தை; இந்தச்சிரமம் வேண்டாம் எனச் சோபாவில் சாய்ந்து விழுகின்றனர். இலக்கியத்தில் தாம் கொண்ட பிரியத்தால் படித்துவிடலாம் எனத்தைரியம்கொள்ளும் சிலர் இலக்கணப்பகுதியைக் கண்டவுடன் ஓகோ நன்னூலாம், பிறபாப்பாம்; நாமும் பிறகு பார்ப்போம் என வாசாமகோசரமாகப்பேசி, கையில் இருப்பதையும் பக்கத்தில் வீசிவிட்டு முயற்சியின்றி இருக்க நேரிடுகிறது.

இவ்வித அசௌகரியங்களை நீக்கக் கற்றோரும், மற்றோரும், எளியரும், செல்வரும், பரீட்சைகளிற் கலந்து தமது நோக்கத்தை பூர்த்தி செய்யக்கூடியவழி ஒன்றை மேற்படி சங்கத்தார் கையாளவேண்டும். நாம் கூறிய முக்கழகத்தினரும் பிரதிவருடமும் பற்றப்பட்ட பரீட்சைகள் நடத்திவருவதோடு, பிரதிமாதமும் ஒவ்வொரு பரீட்சை நடத்தவேண்டுமென்பதே. ஓர் மாதம் வசன நூல் ஒன்று; மறுமாதம் நீதி நெறிவிளக்கம், மதுரைக்கலம்பகம், குறளில் 1 பால் இம்மாதிரி சுருங்கிய இடங்கொண்டவையாகிய செய்யுள் ஒரு மாதம்; இலக்கணம் ஒரு மாதம்; செய்யுளியற்றல் இம்மாதிரியாகப் பதினெண் கீழ்க்கணக்கினூல்களையும் ஏனையநூல்களையும் தனித்தனியாகப் பிரதி மாதமும் மேற்சங்கத்தார் பரீட்சிப்பின் யாரும் எளிதில் புத்தகங்கள் வாங்கி வாசித்துப்படித்துப் பரீட்சையிற்றேறிதமது முயற்சியை விருத்திசெய்ய அனுகூலமாகவிருக்கும். சங்கத்தார் பிரவேசக்கட்டணம் பெற்று பரீட்சித்துத் தேறியவர்கட்கு யோக்யதாபத்திரங்களில் தேறியவர் பெயர் தேறிய விஷயம் எழுதிக்கொடுப்பார்களாயின் அதைப் பெறுபவர்கட்கும் மன ஊக்கம் ஏற்பட்டு பிரதிமாதமும் புத்தகம் வாங்கவும் படிக்கவும் ஒவ்வொருவரும் துணிவர் என்பதில் கடுகளவும் ஐயமின்று. எங்குந்தமிழ் மணக்கும்; எவர் வாயிலும் பாவுலவும்; எவரிடமும் சாத்வீக ஒளி பிரதிபிம்பஞ்செய்யும்; பண்டைப்புலவர் வாழ்ந்த நாடு என்பதைத் திட்டமாய்க்காட்டும்.

இவ்வழி (வருடம் ஒரு முறைசிலரைச் சிறப்பிக்கச் செய்கின்ற பண்டித பரீட்சையுடன்) தமிழ்த்தாயின் மக்கள் ஒவ்வொருவரும் நிரந்தரமாகத் தாயின் அன்பைப்பெறுவதற்கு ஏதுவாக இருக்கிறது. ஆனபடியின் மேற்கண்ட முச்சங்கத்தாரும் அவர்கள் நாம் குறிப்பிடுகிற வண்ணம் பொதுஜனங்கள் மீது கொண்ட தயையாலும், தாயின் மீது கொண்ட அன்பின் பெருக்காலும் தேசத்தில் தமிழ் மணத்தை முகரும் விருப்பாலும் தகுந்த ஏற்பாடுகள் வரும் தை மாதமுதலே ஆரம்பிப்பார்களாயின் எண்ணற்கரிய குழந்தைகள் மென்மேலும் ஊக்கமாக முயன்று தமிழ்ப் பாஷையில் ஈடுபட்டு நம்மிந்தியாவின் பூர்வீகச்சிறப்பை நாட்டுவார்கள் என நினைக்கின்றேன். இதே விஷயத்தை இதைக் கண்ணுறும் ஒவ்வொரு பத்திராசிரியரும் தத்தம் பத்திரிகை மூலமாய் வலியுறுத்தி, நம் தமிழ்ச் சங்கங்களுக்கு அறிவிக்குமாறு பன்முறையும் வேண்டுகிறேன்.

தமிழ்க்குழந்தை, ஆ. அ. குமரகுருபரர்,
செவ்வாநு க்ஷத்திரிய வித்யாசாலை,
அருப்புக்கோட்டை.

## நற்பெண்.

நற்பெண் யாரென அறிய யாவரும் ஆசைகொள்வோமென்பதில் எள்ளளவேனும் ஐயமின்று. ஆகையால் அவ்வகை நற்பெண்ணின் லக்ஷணங்குறித்து ஈண்டு வரைவது அத்தியாவசியமாகிறது.

அவளோர் புண்ணிய பொக்கிஷம்; ஞானக்களஞ்சியம்; பொறுமைக்கிருப்பிடம்; நற்றுணைபாத்திரம்; கற்பலங்காரி; அறிவிலே மந்திரி; பிராணன் போவதாயிருந்தாலும் பொய் சொல்லாள்; பாவமென்றால் பாம்பைக்கண்டவன்போல் வெருவுவாள். அவளிடத்திலோர் அறியாமையுமுண்டு. என்ன? அந்நிய புருஷரை அறியாமலிருக்கிற அறியாமையின்றி வேறு அறியாமை அவளிடத்திலில்லை. அவளிடத்திலோர் பொய்யுண்டு. என்ன? தான் புண்ணியவதியாயிருக்க தன்னை பாவியென்று சொல்லுகிற பொய்யைத்தவிர வேறு பொய் சொல்லியறியாள். அவளுக்கொன்றில் பகையுண்டு. என்ன? பாவத்தின்மேல் பகையே தவிர மற்றவர்களிடத்தில் பகையென்பது கிஞ்சிற்றேனும் கிடையாது. அவளிடத்திலோர் சண்டையுண்டு. என்ன? தன்குடும்பத்தில் தர்மம் செய்வதில் ஒருவருக்கொருவர் முந்திக்கொள்கிற சண்டையைத்தவிர வேறு சண்டை கிடையாது. அவளுக்கோர் பேராசையுண்டு. என்ன? மோக்ஷத்தில் தனக்கு பங்குகிடைக்க வேண்டுமென்கிற பேராசையைத்தவிர வேறு பேராசை கறுப்போ சிவப்போ என்றறியாள். இவள் சிலரை பட்டினிபோடுவாள். யாரை? தன் வீட்டிற்கு வரும் ஈக்களும் எறும்புகளும் அசுத்தமகப்படாமல் பட்டினியாயிருக்குமேயன்றி பிச்சைக்காரர்களும் ஏழைகளும் பட்டினியாயிருப்பதில்லை. அவளோர் துரோகம் செய்வாள். என்ன? தான் வயிற்றிற்கில்லாமல் கஷ்டப்படுங் காலத்திலுங்கூடதான் உண்ணும் ஆகாரத்தை ஏழைகளுக்கிட்டு தன் வயிற்றிற்கு அவள் செய்யும் துரோகத்தைத்தவிர வேறு துரோகம் செய்தறியாள்.

இவள் இருதயம் எவ்வாறு சுத்தமோ அவ்வாறே அவள் சரீரமும் ஆடையும் சுத்தமாய் இருக்கும். தன் இல்லத்தையும், பாத்திர பண்டங்களையும் சுத்தமாய் அதனதன் ஸ்தானத்தில் வைத்திருப்பாள். அசுத்தமென்பது அவள் கண்ணுக்கெதிர்ப்படாது. தன் கடமையில் எள்ளளவேனுந்தவறாள். செய்வன திருந்தச் செய்வாள். தன் கடமைகளை முடித்தபின்புஞ் சிறிது நேரம் கடவுளை தியானஞ்செய்வாள். வேதபுத்தகத்தை எடுத்தால் திரும்பக் கீழேவைக்க மனங்கொள்ளாள். வாசித்து முடித்தபின் தன் புத்திக்கெட்டாத விஷயங்களை கடவுளிடத்தில் மன்றாடிக்கேட்டுக்கொள்வாள். அதன் பின் நல்ல நூல்களை வாசிப்பாள். கடைசியாக சிறிது நேரம் வீணை வாசிப்பாள்.

இவளுக்கோ கணவனே கதி; கணவனே கதி; பர்த்தாவுடன் கூடிவாழ்வதே அவளுக்கு பரமானந்தம்; பர்த்தா இருக்குமிடம் காடாயிருந்தாலும் அவளுக்கு அதே ராஜதானிக்குச் சமானம்; கணவனுடைய துக்கமே அவளுக்கு துக்கம்; கணவன் வியாதியாயிருக்கையில் இவளே பரமசஞ்சீவி; தரித்திரகாலத்தில் இவளே திரவியம்; கணவன் ஆனைச்சிவப்பாயிருந்தாலும் அவனை அதிரூப சௌந்தரிய முள்ளவனாக வர்ணிப்பாள். கல்லாகிலும் கணவன் புல்லாகிலும் புருஷன் என நினைப்பாள். கணவன் ஊரில் இல்லாத காலத்தில் தன்னை அலங்கரியாள். ஒருவிஷயத்திலும் தன் கணவனுக்கு கோபம்வர விடாள். குடும்பத்திற்குவேண்டிய பதார்த்தங்களை தக்ககாலத்தில் சேகரித்துக்கொள்வாள். கணவனை அடிக்கடி கேட்டு தொந்தரவு செய்யாள். கணவனுடைய வருமானத்திற்கு மிஞ்சி ஒரு தம்படி செலவு செய்யாள்.

மாமியும் மருகியும் மருவிவாழ்தலரிது என்னும் பழமொழி இவளிடத்தில் பொய்க்கும். மாமியும் தாயும் ஒன்றென நினைப்பாள். மாமனும் தகப்பனும் ஒன்றென நினைப்பாள். தமக்கையும் நாத்தியும் சகோதரிகளென நினைப்பாள்.

குரு அரசன் தாய் தந்தைஇவர்களை தெய்வமபோல் பாவித்து மரியாதை காட்டுவாள். அன்பின் இலக்ஷணங்களை அனுதினமும் காப்பாள். அன்பின் இலக்ஷணங்களாவன:—(1 கொரிந்தியர் 13; 4—7 அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது. அன்புக்கு பொறாமையில்லை. அன்பு தன்னைப்புகழாது இறுமாப்பாயிராது. அயோக்கிய மானதைச் செய்யாது. தற்பொழிவை நாடாது. சினமடையாது. தீங்கு நினையாது. அநியாயத்தில் சந்தோஷப் படாமல் சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும். சகலத்தையும் விசுவாசிக்கும். சகலத்தையும்நம்பும். சகலத்தையும் சகிக்கும்) ஆகையால் இவள் தன் குடும்பத்தில் மட்டும் தனதன்பைக் காட்டாமல் தன் தேசத்திற்கும் தனதன்பைக் காட்டுவள். அவளுக்கெப்போதும் பரோபகார சிந்தையைத்தவிர வேறு சிந்தைகிடையாது. தீமை செய்வோருக்கும் நன்மைசெய்வள். பிறர்துன்பத்தை நீக்க தன்னால்கூடாத காலத்தில் கடவுளையும் பிரார்த்திப்பாள். இத்தியாதிகுணங்கள் நிரம்பப்பெற்ற பெண்களே உலகத்தில் நற்பெண்களென பெயர் பெற்றிலங்குந் திறத்தால் பெண்மக்களாய்ப் பிறந்தாரனைவரும் நல்வழியாகிய இச்செவ்வழிபுக்கு வாழ்க்கை நலனெய்திப்பெரும் பயனடைவார்களாக.

நா. சாமுமேல் ஜோசப்நாடார்,
நாடார் ஸ்கூல், அருப்புக்கோட்டை.

## விருதுநகர், T. R. லைப்ரரி.

### 9-வது ஆண்டு நிறைவுவிழா.

(ஒரு நாடார் நண்பர் எழுதுகிறார்.)

மேற்படி வாசகசாலையின் ஒன்பதாவது ஆண்டு நிறைவுவிழா நாளது மார்கழி மாதம் முதல் தேதி (16—12—26) வியாழக்கிழமை வாசகசாலையின் முன் அமைத்துள்ள சிங்காரப் பந்தலில் மாலை முப்பது நாழிகைக்கு விழா ஆரம்பமாயிற்று. விவசாயிகளும், வியாபாரிகளும், தொழிலாளர்களும், உத்தியோகஸ்தர்களும், உபாத்தியாயர்களும், மாணவர்களும் ஏராளமாக நிரம்பியிருந்தனர்.

பஜனைத் தலைவர் நண்பர் கிருஷ்ண நாடார் அவர்கள் இன் இசையுடனும், இனிய குரலுடனும் கடவுள் வணக்கப் பாக்கள்பாடி தெய்வ அன்பு உதிக்கச் செய்தனர். நண்பர்கள் க. பெ. சங்கரலிங்கம், அ. ச. க. கு. இராமசாமி இவர்கள் முறையே பிரேரித்து ஆமோதிக்கப்பெற்ற காரைக்குடி "குமரன்" ஆசிரியர், ஸ்ரீமான் சொ. முருகப்ப செட்டியார் அவர்கள் சபாநாயக சம்மத சொற்பொழிவு நிகழ்த்தி ஆசனத்திலமர்ந்தனர். காரியதரிசி நண்பர் சி. பெ. சி. வ. பிரகாசம் அவர்கள் வாசகசாலையின் அறிக்கைப் பத்திரம் படித்த பின் சபாநாயகர் அவர்கள் எழுந்து சிறிது முகவுரைதந்து ஆசனத்திலமர்ந்தனர்.

அன்புமிகுந்த இராட்டைப் பாட்டினை நண்பர் கிருஷ்ண நாடார் அவர்கள் பஜனை அன்பர்கள் இசையுடனும், இனிய குரலுடனும் இன்பமுடன் பாட, உலக உத்தமர், குணமலை கருணைக் கடல், காணும் தெய்வமாம் காந்தியடிகளாரிடம், உலகத்துக்கு சமாதானத்தையும், க்ஷேமத்தையும் நல்கவல்ல சக்கரமாம் கை ராட்டினத்தில் சிறந்த நூல் நூற்றதற்காக தங்கப்பதக்கம் பெற்ற திருப்புவனம் ஸ்ரீமான் வெ. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்களால் இராட்டில் நூல் நூற்றல் காட்சி கொடுக்கப்பெற்றது. அன்னவர் நூற்ற நூலினைக் கண்டும், அன்னவர் நூற்ற உயர்தர நூலைக் கொண்டு அருமையுடன் நெய்த ஆடைதனைக் கண்டும் சபையினர் ஆனந்தங் கொண்டனர்.

அதன் பின் மதுரை வக்கீல் ஸ்ரீமான் வ. பொன்னையா நாடார் பி. ஏ. அவர்கள் "நாடார்களும், தேச சேவையும்" என்பது பற்றியும் போடப்பட்டி ஸ்ரீமான் இ. கருப்பையாபிள்ளை அவர்கள் "வாசகசாலையின் பயன்" என்பது பற்றியும், திருவாங்கூர் குரள் அவதானியார் ஸ்ரீமான் சுப்பிரமணிய தாஸ் அவர்கள் "திருவள்ளுவரும், காந்தியடிகளும்" என்பது பற்றியும், காரைக்குடி "குமரன்" உதவி ஆசிரியர் ஸ்ரீமான் ௬. ச. கிருஷ்ணன் அவர்கள் "மகாத்மா காந்தி போதிப்பதென்ன" என்பது பற்றியும், ஸ்ரீமான் அ. திருவாலவாயசுவாமிகள் "நாமும், பெண்மக்களும் சைவஉணவு" என்பது பற்றியும் அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்கள்.

[illegible] க்ஷத்திரிய வித்தியாசாலை மாணவர்களைக் கொண்டு, இக்காலத்தில் பொய் வேஷதாரிகளின் மாயவலைகளில் சிக்குண்டு மோசம் போகாவண்ணம் அறிவை விர்த்தி செய்ய ஆற்றல்வாய்ந்த நவீன நாடகம் ஒன்று சபையார் ருசிக்கும் வண்ணம் நடத்திக் காட்டப் பெற்றது.

அதன் பின் சபாநாயகர் முடிவுரையாக தாய் மொழியாகிய தமிழ் மொழி தமிழ்ச் சங்க நூற்கள் இயற்கை இன்பம் இவைகள் பற்றியும், தற்கால அரசியல் பற்றியும், மகாத்மா காந்தியடிகளின் நிர்மாணத் திட்டங்களாய கதர் அணிதல், தீண்டாமை ஒழித்தல், மதுவிலக்கு, கல்வி, உத்தியோகம் இவைகள பற்றியும் சிறந்த மேற்கோள்களுடனும், உதாரணங்களுடனும் இன்பம் ததும்பிய அன்புமயமான சொற்பெருக்கு நிகழ்த்தி ஆசனத்திலமர்ந்தார்கள்.

கடைசியாக சபா நாயகர் அவர்களுக்கும், சொற்பெருக்கு நிகழ்த்திய பெரியோர்களுக்கும், மற்றுமுள்ள அன்பர்களுக்கும் பூமாலை சூட்டி வந்தன உபசாரம் சொல்லப்பெற்று இரவு சுமார் பதினொரு நாழிகைக்கு நிறைவுவிழா மங்களமாக முடிவெய்தியது.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



நாடார்குலமித்திரன்
அக்ஷய ஞூ மார்கழி மீ ௰௨ உ

## ஏழை மாணவர் சகாய நிதி.

### II

மேற்கண்ட நிதிக்குரிய பண்டு சொத்தாயிருப்பதின் தன்மைகளைக் குறிப்பிட்டு ரொக்கத்தின் தன்மைகளைப் பற்றி மறுமுறை எழுதுவதாக சென்றவாரத்தில் சொல்லியிருந்ததை நேயர்கள் கவனித்திருக்கலாம்.

பொன் விளையும் பூமியாகவிருப்பதைப் பார்க்கிலும் பொன்னுயிருப்பது நன்மை யென்பதில் யாதொரு நஜாயமுமில்லை. அப்படியானால் அதற்குப்பாதுகாப்பு அதிகம் வேண்டியதிருக்கிறது. பொதுவாக ஒரு பண்டுக்குப் பணம் சேர்ந்தவுடனே அதில் சிரத்தையுடையவர்கட்கெல்லாம் விசேஷ சிரத்தை யேற்படுகிறது. சிரத்தை யில்லாதிருந்தவர்களுக்கு ஒரு உணர்ச்சி யுண்டாகிறது. பொதுக்காரியம் மிகக் கசப்பானதென்று ஒதுங்கியிருப்பவர்களுங்கூட பணம் சேர்ந்துவிட்டதென்றால் தங்களுக்கும் விசேஷ அபிமான மிருப்பதுபோல் நடிப்பதும், தாங்களும் அதில் சேர்ந்து கொண்டால் இன்னும் விசேஷ விர்த்தி செய்யலாமென்று பேசுவதும், எப்படியாவது பண்டுப் பணத்தைப்பல பேருக்கும் பங்கிட்டு வைத்துக் கொள்வதற்குள தந்திர சூட்சிகள் எவ்வளவுபேச்சு வேண்டுமானாலும் செய்தும் பேசியும் பண்டு பங்கிட்டானவுடன் அப்பணத்தைப் பற்றிய வரவு செலவு யாரும் கேட்கக்கூடாது; யாரும் கேட்க உரிமை கிடையாது; அப்படிக் கேட்டு வழக்குத் தொடர்ந்தால் அப்பொதுப் பணத்தைச் செலவு செய்தே அவர்களுக்குக் கேட்கப் பாத்தியமில்லை; நாங்களே சர்வாதிகாரமும் பெற்றிருக்கிறோமென்று சாதித்துவிடலாமென்று பணம் வைத்திருப்பவர்களுக்குள் ஒரு சிலர் சேர்ந்துகொண்டு விவாதத்தைக் கிளப்பிப் படுத்துக்கொள்கிறார்கள். மற்றவர்களிலும் ஒருசிலரைத்தவிர பெரும்பாலோர் படித்தவர்களைச் சுட்டிக்காட்டி விட்டு தங்களுக்கு நல்லெண்ணமிருப்பது போலவே நடிக்கிறார்கள். முடிவில் பணத்தை வைத்துக்கொண்டு விதண்டாவாதம் பேசும் ஆசாமிகளே மெஜாரிட்டியாயிருக்கும். நன்னோக்கமுடைய மைனாரிட்டியார் ஒன்றும் செய்யமுடியாமல் மயங்கி வாளாவிருந்து தவிப்பர். இராவணன் தானிருக்கும்வரையும் சீதையை விடமாட்டேனென்றது போல பொதுஜனங்கள் எவ்வளவுமுயன்று பார்த்தாலும் நன்மதி நவின்றாலும் அவர்கள் வாழ்வு வாழப்போகிற வரையும் அம்மதியை விடவே மாட்டார்கள். இப்படி நடப்பது எங்கும் சகசமாயிருக்கிறது. மகாத்மா காந்தி ஒரு கோடி ரூபாய் சேர்த்தார். அம்மகத்தான தொகை ஆசாமிகளுக்குங்கூட தேசாபிமானம் பொங்கிவிட்டதாகவும் சம்பளமாகவும்படியாகவும் அத்தனையும் சாப்பிட்டுத் தீர்த்ததுவென்று சொல்லப்படுகிறது. இப்படி யெல்லாம் ஆனவுடனே மற்றவர்களுக்கென்ன அப்பணத்தில் பங்கில்லையாவென்ற ஒரு கிளர்ச்சி யேற்படுகிறது. அதனால் ஒற்றுமைக் குறைவுண்டாகி அப்பணத்துக்கே ஹானி நேர்ந்துவிடுகிறது. இப்படிச் சரித்திரங்கள் பலவுள.

நாடார்சமூக மத்தியிலும் ரொக்கப்பண்டு விஷயமான தர்க்கங்கள் இல்லாமற்போகவில்லை பற்பலவூர்களிலும் அவ்வவ்வூர்ப்பொதுப்பண்டு விஷயமான குதர்க்கத்தால் பொதுக்காரியங்களை சரிவர நடக்கவில்லையென்று பலதைக் கேள்விப்பட்டிருக்கிறோம். பர்மா நாடார் மகாஜனக் கிளைச் சங்கத்தில் சிறிது பண்டிருந்ததாகவும் பின்னர் அது இன்னவிதமானதென்றே தெரியவில்லையென்றும் கேள்விப்பட்டிருக்கிறோம். சிலோன், இந்திய க்ஷத்திரிய நாடார் சங்கத்தின் பொது நிதி பலபேர்கள் கையிலிருக்கிறதென்றும், அதைமீண்டும் ஒன்று சேர்க்க முடியவில்லை யென்றும், அது அங்கு தங்கப்போகும் இந்திய நாடார்களுக்கு வசதியான கட்டடம் வாங்குவதற்காக ஏற்பட்ட பண்டென்றும், அப்படிச் செய்யக்கூடாமல் நமது நாடார்களுக்குள்த் தானிருக்கிறதென்றும் சொல்லப்படுகிறது. நமது நிதம் பசும் மகமைப் பண்டு இப்போது என்ன நிலைமையிலிருந்து வருகிறதென்பதும், அதைச் சீர்திருத்தம் செய்யவேண்டுமென்று சிலவாண்டுகட்கு முன் நாடார் மகாஜன சங்கமே பெரிதும் முயற்சிசெய்து பார்த்து முடிவில் ஒன்றும் முடியாமற்போன விஷயமும் எல்லோருக்குந் தெரிந்திருக்குமாகையால் அதைப்பற்றி ஈமதிகம் விரித்துரைக்கவேண்டியதில்லை. இப்படி பொருளாகவிருப்பதிலும் பல பிணக்குகள்வந்துவிடுகின்றன. ஒருவருக்கு மனம் மாறுதலடையும்போது அவருடைய செயல், தொழில் எல்லாம் மாறிப்போவது சகஜமாயிருக்கிறது. ஆகையால் பொதுஸ்தாபனப்பண்டு பணமாயிருந்தாலும் சொத்தாயிருந்தாலும் அதை நிர்வகிக்கும் மனிதர் மனமாறுதலடையும்போது அதற்கு ஹீனமுண்டாகவே கூடும். அதற்காகவே பரம்பரை யதிகாரம் நிரந்தரமாய் எல்லாவற்றிலுமிருக்கக்கூடாதென்றும், தேர்ந்தெடுக்கும் முறைதான் சரியான முறை யென்றும் சொல்வதின் நியாயம் நன்கு புலனுகிறது. நல்ல குணமும் மனமும் உள்ள மனிதர்கள் வசம் நிர்வாகமும் அதிகாரமுமிருந்தால் பொருளும் சொத்தும் விருத்தியாகிப் பொதுஜனங்களுக்கு உபகாரமாகத் தானிருக்கக்கூடும். பொறுப்புணர்வில்லாத மனிதர்கள் பால் எது சேர்ந்தாலும் அது முடிவில் சிக்கலான பிரசினையைத்தான் உண்டு பண்ணி வந்திருக்கிறது.

நமதுநாடார்மகாஜனசங்கத்தின் அமைப்போ எப்போதும் தவறான வழிக்குக் கொண்டு போய்விடாது. நாட்டாராலும், நாடார்களாலும், ராஜாங்கத்தாலும் நன்குமதிக்கப்பெற்று வந்திருக்கிறது. இதுவரையும் வந்த அதிகாரிகள் போற்றத்தக்கவர்களே. நடந்த நிர்வாகமும் போற்றத்தக்க விதமாகவேயிருந்திருக்கிறது. இன்னும் மேலான மார்க்கத்தில் அதுபிரகாசிக்குமென்றே நம்புகிறோம். சர்வஜனங்களாலும் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த அதிகாரிகளாயும் வருடமொருமுறை புதுப்பிக்கப்படுபவர்களாகவுமிருப்பதால் அவர்கள் பொருளையும் விர்த்திசெய்து சர்வஜனசம்மதமாய் நடக்கக்கூடுமென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. ஆனால், பண்டு ரொக்கமாகவேயிருக்கவேண்டுமென்றும் அதுவும் நாடார் பாங்கிற்றான் பணம் கொடுத்துவைக்க வேண்டுமென்றும் பெரும்பாலோர் அபிப்பிராயப்படுவதாகத் தெரியவருகிறது. அது நியாயமென்றுதான் எல்லோருக்கும் தோன்றும். அதுபோலவே நாடார் மகாஜனசங்கம் ஜெனரல் மீட்டிங்கும் தீர்மானிக்குமென்று நம்புகிறோம்.

நாடார் மகாஜன சங்கம் கான்பரன்ஸுகளில் தீர்மானத்துக்கு வந்த பல முக்கியமான காரியங்களில் நாடார் பாங்கு ஒன்றே பொன்னேபோல் போற்றத் தக்கதும், குறிப்பிடத்தக்கதுமான பெருமை பொதிந்து விளங்குவதற்கேற்ப அது (பாங்கு) ஆதியில் உற்பவிக்கும்போது நாடார் மகாஜன சங்கத்துக்கு வாக்களித்த ஒரு விஷயத்தை மறந்துவிடக்கூடாது. மகாஜனசங்கம் ஜெனரல் மீட்டிங் கூடுமுன்பே அது விஷயமாய் மீண்டும் புனராலோசனை செய்யும்படி பாங்கின் டைரக்டர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம். நாடார் மகாஜன சங்கமும், நாடார் பாங்கும் நாடார் சமுதாயவிருத்தியில் ஒத்துழைத்து இன்னும் விருத்தி செய்யவேண்டுமென்று வேண்டிக்கொள்கிறோம்.

நாடார் மகாஜன சங்கம் அதிகாரிகளுக்கு இனிமேற்றான் அதிகப்பொறுப்பாகவும், பொறுமையாகவும் பார்க்க வேண்டிய கடமைகள் அதிகமுண்டாகக்கூடும். ஆகையால் தற்போதுள்ள நன்னோக்கமும் சமூக சேவைப் பிரியமுமுள்ள எல்லா அதிகாரிகளும் சலிப்பின்றி அதிக சிரத்தைகொள்வதுடன் சமுதாயவிருத்திக்குரிய கல்வியை விசாலப்படுத்த என்னென்ன ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்பதை ஒரு திட்டம் போட்டு நடத்தவேண்டும். ஜெனரல்மீட்டிங்குக்குள் நிர்வாகஸ்தர்களும மற்றத் தலைவர்களும் சரியான ஒரு திட்டம் தயார்செய்வார்களாக.

தை மாதம் கூடப்போகிற ஜெனரல் மீட்டிங்கு மிக முக்கியமானதால் அதற்கு வரவேண்டியவர்களும் ஆலோசனை சொல்பவர்களும் தவறாமல் வந்துசேர வேண்டியது அவசியம். நாடார் மகாஜனசங்கம் எப்போதும் நல்ல நிலைமையிலிருந்து வரவேண்டுமானால் சரியான தலைவர்களையும் சரியான அதிகாரிகளையும இதுவரையும் தெரிந்தெடுத்து வந்திருப்பதுபோல் இன்னமும் தேர்ந்தெடுத்து வரவேண்டும். பொது ஜனாபிமானமில்லாத குறுகிய நோக்கமுடையவர்களிடமாவது ஏழைகள் கஷ்டத்தில் உணர்வில்லாதவர்களிடமாவது சங்க நிர்வாகங்கள் போய்ச்சிக்கிக்கொள்ளாமற் பார்த்துக்கொள்ள வேண்டியது ஜனங்களுடைய கடமையாகுமென்பதை வற்புறுத்துகிறோம்.

---

## சுய நலத்தினால் வந்த கேடு.

### பிறர் நலம் நாடினால்தான் தன்னலம் சித்திக்கும்.

(நாதன்.)

தனக்கு ஒரு சுகத்தைத்தேடுகிறவன் எவனோ அவன் மற்றவர்களுடைய சுகத்தையும் நாடினால்தான் தன்னுடைய சுயநல விருப்பு சித்திக்கும். தெய்வானுகூலத்தால் சகல சம்பத்தும், பெற்று சமபன்னராய் வாழும் ஒருவன் தன்னுடைய சொந்த பந்துமித்திரர்களுடைய க்ஷேம லாபங்களிலும் கண்காணிப்பாயிருக்கவேண்டியது அவனின் கடமையாகும். அவ்வாறே ஒரு ஜாதியினரிலோ, ஒரு வகுப்பினரிலோ, அல்லது ஒரு மதத்தினரிலோ முற்போக்கடைந்து விளங்கும் சிலர் தங்களைச் சார்ந்த இதரர்களுடைய முற்போக்கையும் கவனிக்கவேண்டியது அவர்களின் கடமையாகும். அதுபோன்றே ஒரு ஜாதியாரோ, அல்லது ஒரு வகுப்பினரோ ஒரு தேசத்தில் முற்போக்கடைந்து முதன்மைபெற்று செல்வாக்குடனிருந்தால், தங்கள் சகோதர ஜாதியினுடையவோ வகுப்பினுடையவோ அபிவிருத்தியைக் கவனித்துக்கொண்டு வந்தாற்றான் அவர்களுடைய முற்போக்கு பலன்தரத்தக்கதாகும். ஒரு மானிட ஜீவன் செ முதற்கொண்டு விருத்தாப்பிய நிலையடையும் வரைக்கும் இப்பக்குவத்திலேயே சாதிக்கவேண்டியிருக்கும் தன்மையின் தத்துவத்தை யறியாமல் எப்போதும் சுயநல முயற்சியுடன் எக்காரியத்திலும் பிரவேசிக்குமானால் அது சித்தியடையாமல் அதிக துன்பத்தையும் விளைவிக்கிறதென்பதை ஒருவாறு எனது அனுபவத்தில் கண்டிருக்கிறேன்.

**இந்து மதாபிமானிகளே !**

உங்களுடைய மதம் எந்நிலையிலிருக்கிறதென்பதைக் கவனியுங்கள். தீண்டாமை என்னும் தொத்து நோய் நாட்டில் அதி தீவிரமாய் பரவிக்கொண்டு வருகிறது. தீண்டாமை இந்து மதத்தைப் பிடித்ததற்குக்காரணம் ஆதியில் சில சுயநலப்புலிகளின் செயல்களேயாகும். பின்னும் நாளது பரியந்தம் அது பரவிக்கொண்டிருப்பதற்கும் இக்காலத்திலுள்ள இந்துமத சுயநல வைதிகக் கோஷ்டிகளின் அறியாமையே காரணமாகும். மதப்பிரசாரத்திற்காக முற்காலத்தில் இந்து அரசர்கள் எத்தனையோ சாதனங்களையும் தர்மஸ்தாபனங்களையும் ஏராளமான பொருட் செலவில் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவைகளெல்லாம் எங்கே இருக்கின்றன? என்ன செய்துகொண்டிருக்கின்றன? சுயநலத்துடன் அவைகளெல்லாம் தூங்கிக்கொண்டிருக்கின்றன. ஆதியில் இந்து மதத்தில் தீண்டாதவர்கள் எத்தனை பேர்கள் ஒதுக்கப்பட்டிருந்தார்கள்? இப்போது அதன் தொகை எவ்வளவு விரிவடைந்திருக்கிறதென்பதைக் கவனியுங்கள். இந்தியாவிலுள்ள மொத்த ஜனத்தொகையில் ஏறக்குறைய மூன்றில் ஒரு பாகத்தை சரிப்படுத்திவிட்டது. இன்னும் தக்க பரிகாரம் தேடாதவரையில் பாக்கிவைத்திருக்கும் பாகத்தையுங்கூடிய சீக்கிரம் சரிக்கட்டிவிடுமென்பதில் சந்தேகமில்லை. வைதிகர்களே! அப்போது புது சீர்திருத்தக்காரர்கள் ஒருவேளை உங்களையும் ஒதுக்கிவைத்தாலும் வைப்பார்கள். உங்கள் வைதிகக்கொள்கையைப்பிடித்துக்கொண்டு எப்போதும் ஜீவிக்கமுடியாது. சீர்திருத்தம் என்ற மருந்து கொண்டுதான் இனி இந்து மதத்தைப் பிடித்திருக்கும்தீண்டாமையைப் போக்கமுடியும்.

**சீர்திருத்தக்காரர்களே !**

இதுதான் சரியான காலம். உங்கள் வரவை இந்துமதம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. சீக்கிரமாகக் கிளம்புங்கள். இந்த சமூகத்தில் பரவியிருக்கும் தொத்து வியாதியை அப்புறப்படுத்துங்கள். உலகத்தலைவான மகான் மகாத்மா காந்தியடிகளும் இவ்விஷயத்தில் கருணைகூர்ந்திருக்கிறார். தீண்டாமை தீராதவரையில் இந்துமதத்திலுள்ள ஒவ்வொரு

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



# வறுமையை ஓட்டும் காமதேனு கதரே.

—oo—

## ஸர். பி. ஸி. ராயின் பிரசங்கம்.

கோகலே மண்டபத்தில் கொஞ்சம் கூட இடம் பாக்கி யில்லாது நிறைந்திருந்த மாணவர்களுக்கு கதரைப்பற்றி ஆச்சாரியர்ராய் செய்த பிரசங்கத்தின் சாரம் வருமாறு:—

கதர் நாளுக்கு நாள் சென்னையில் பிரபலமாகி வருகிறது. சென்னை இருண்டிருந்த பிரதேசம் என்பார்கள் ஆனால் வங்காளத்தில் சென்னை ஏன் மாசணமாகியவங்காளத்தைத் தூக்கியடித்திருக்கிறது. இந்நகரத்தில் கூட கதர் வெகு பிரசித்தமாய் விற்பதைக் காண எனக்கு விசேஷ சந்தோஷம் ஏற்படுகிறது. இங்கிலீஷ்காரருடைய ஆகாரத்திலிருக்கும் சத்தைப்பற்றி கேற்றுப் பேசியிருக்கிறேன். நம் நிலையைக் கொஞ்சம் கவனியுங்கள். லார்டு லிட்டன் ராஜப் பிரதிநிதியாக விருந்த பொழுது 43 லட்சம் பேர்கள் பஞ்சத்தினுலிறந்தார்கள். மசூலிப்பட்டணம் கள்ளிக்கோட்டை முதலிய முஸ்லீம்கள் நெசவிற்குப் பேர்போனவர்கள். இப்பொழுது தொழிலில்லாமல் கஷ்டப்படுகின்றனர். விவசாயிகள் வருஷத்தில் 6 மாதம் ஒரு வேலையுமில்லாது கஷ்டப்படுகிறார்கள். 100 வருஷங்களுக்கு முன்பாக வங்காளத்திலிருந்து 2 கோடி ரூபாய் பெறுமான அரிசி ஏற்றுமதியாகி வந்தது. அப்பொழுது அரிசி ரூபாய்க்கு 10 படி. சென்னையில் மஸ்லின் ஏராளமாக நெய்து ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. இப்பொழுது அநேகர் விவசாயத்தையே மறந்து போய்விட்டார்கள். மகாத்மா காந்தி கைம்பிராவிடில் இத்தொழில் அடியுடன் மறந்துபோயிருக்கும்.

நம் நாட்டு ஜனங்களின் வெட்கக்கேடான மனப்போக்கும், ஆங்கிலப்படிப்புமே இவ்வறுமைக்குக் காரணம். நெக்டை, ஸ்டிப் காலர் போன்ற அவமான மான உடை நமக்கெதற்காக? வெள்ளையரைப் போல் உடையுடுத்து நம் நாட்டு அழகான பழக்க வழக்கங்களைக் கைவிடுவது மிகவும் கேவலமான ஸ்திதியையே உணர்த்துகிறது. நம் நாட்டின் பெருமை எங்கே? இதை மறந்ததனால் நம பெற்றோர்களையும் மூன்னோரையும் மறந்த துரோகிகளாகிவிட்டோம். வங்காளத்தில் இந்தப் பாதகம் சகிக்கமுடியவேயில்லை. அங்கு வக்கீல்களும் மாணவர்களும் தோத்தி கட்டுவதும், நெக்டை காலர் கட்டுவதும் கண்கொண்டு காணமுடியாத குரூர காட்சியாக விருக்கிறது. சுதேசியம் வலுக்க வேண்டுமானால் பிறரைப் பரிகசிக்கும் நடையுடை பாவனை நம்மை விட்டகலவேண்டும். ஆங்கில மனோபாவத்தை விட்டு இந்திய மனோபாவத்தைக் கையாளுபவர்கள் கட்டாயம் கதரை உடுப்பார்கள். கதரின் பொருள் என்ன? அது சுதேசியம் என்பதையே காட்டுகிறது. நான் உலகமெங்கும் பிரயாணம் செய்திருக்கிறேன். அங்கெல்லாம் யாரும் ஒரே நோக்கத்துடனிருக்கின்றனர். நம் தேசத்திலோ ஒருவரைப்போல் மற்றவர் கிடையாது. வங்காளத்தில் ஒவ்வொருவரும் தாமே தலைவராக விருக்க விரும்புகிறார்கள். பின் பற்றுபவர்தான் கிடையாது. (சிரிப்பு). அவர்கள் கதர் இயக்கத்தில் அதிக சிரத்தை செலுத்துவார்களானால் தேசத்தில் ஒருவித அமைதியும் ஒற்றுமையும் ஏற்பட்டு சுதேசியம் வலுக்கக்கூடும். கதர் இப்பொழுது வெகு சன்ன நூலிலும் நெய்யப்பட்டு வருகிறது. டாக்கா ஸ்திரீகளின் கைநுட்பத்தை நாம் இலகுவாக மெச்சுவது சாத்யமில்லை. அவர்கள் டாக்கா மஸ்லீன் நூற்று நெய்தது உலகத்தவர் யாவாலும் கவரப்பட்டது. முகலாய சக்ரவர்த்திகள் இந்த மஸ்லீன் துணி நெசவைப் போற்றி வளர்த்துவந்தார்கள். நீங்கள் பெருமையுடன் முரட்டுக்கதரையே கட்டி வருவீர்களானால் சீக்கிரம் அத்தகைய சன்ன துணிகளும் வரக்கூடும். சிறுவர்களும் ஸ்திரீகளும் தினம் கொஞ்ச நேரம் நூல்நூற்க முன்வரவேண்டும். கதர் வரவர மலிவாகிக்கொண்டுவருகிறது. வெகு சுகமாக விருக்கிறது. நீங்கள் பெரும்பாலோர் கதரையே வாங்குவீர்களானால் கதர் சீக்கிரம் அதிகமலிவாகக் கிடைக்கும். இதற்குத் தகுந்த கட்டுப்பாடுடன் நீங்கள் உழைத்து கதர் அதிகமாக நெய்ய ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

ஸ்ரீமான் ஸ்ரீநிவாசய்யங்கார் கதருக்காக நல்லவேலை செய்கிறார். அவருக்கு நீங்களாதரவளித்து மேலும் கதர் வளரச் செய்யவேண்டும். நாம் சாவகாச வேளையில் என்ன செய்வதென்ற கவலையில்லை. எவ்விதம் பொழுதுபோக்குவதென்பதே நம் கேள்வி. சோம்பேறித் தனமாகப் பொழுதுபோக்குவதில் இந்தியர்கள் முதலாக விருக்கிறார்கள். இந்நகரத்தில் சுற்றிப்பார்த்தால் எவ்வளவு சோம்பேறிகள் செருப் புறங்களில் தூங்குகிறார்கள். வயலில் வேலைசெய்யும் தொழிலாளிகளின் நிலைமை என்ன வென்று கவனியுங்கள். இந்தியரின் சராசரி தினசரி வரும்படி என்ன? உங்களுக்குத்தெரியுமா? 7 தம்படிகள் கூட சரியாகக் கிடையாது. இவ்விதமிருக்கையில் ஏராளமான சம்பளத்துடன் கூடிய மந்திரிகளும் இருக்கின்றனர். நம் தேசத்தில் லட்சாதிபதிகள் எவ்வளவு பேர்களிருக்கின்றனர். ஔரங்கசீப் காலத்தில் சராசரி வரும்படி 2 அணாவாக விருந்திருக்கலாம். இப்பொழுது ஆகாரதிகளின் அகவிலை 5 மடங்கதிகரித்திருக்கிறது. இவ்விதமிருக்கையில் நீங்கள் ஏன் கதர் கட்டக்கூடாது? கதர் இனம் கைத்தொழில். இதைப்போற்ற கவர்ன்மெண்டார் காப்புவரி விதிக்கிறார்களா? நம் தேச ஜனங்களின் தேசாபிமானம் தான் அக்கைத் தொழிலைக் காப்பாற்றக்கூடும். இரும்புத் தொழில் அழியாமல் காப்பாற்றுவதற்காக நாம் வரி கொடுக்கிறோம். ஏன் அதைப்போல் ஏழைகள் பிழைப்பிற் கவசியமான கதர் அபிவிருத்தியடைய காப்புவரி விதிக்கக் கூடாது? சென்னையில் மாத்திரம் 2 ஆயிரம் மாணவர்களிருக்கின்றனராம். சிறுவர்களாகிய நீங்கள் தான் கதருக்குதவி புரிய முன்வர வேண்டும். ஒவ்வொரு மாணவரும் வருஷம் ரூ 10-க்கு கதர் வாங்கினலும் கூட 2லட்சம் கதருக்குப்போகும். வங்காளத்தில் வருஷம் 35 கோடி ரூபாய் பெறுமான அயல் நாட்டுத்துணி இறக்குமதியாகிறது. அங்கு 2 லட்சம் ரூ துணிகூட வியாபாரம் ஆவது கஷ்டமாக விருந்தது. நல்ல வேளையாக மகாத்மாகாந்தி சமயத்தில் நம் கைத்தொழிலைக் காப்பாற்ற முன்வந்தார். தற்சமயம் வங்காளத்தில் அநேக பெரியார்கள் தியாகம் செய்து கதருக்காகப் பாடுபட்டு வருகிறார்கள். சென்னையிலும்ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார் நல்லவேலை செய்கிறார். அவர்கள் செய்யும் வேலை பரவச்செய்ய நீங்களாதரவளிக்க வேண்டும். நாம் வெளியூர்களிலிருந்து 62 கோடி ரூபாய் இறக்குமதிகளைத் தடுக்க வேண்டும். சர்க்கா என்னும் கருவிதான் அதைத் தடுக்கும். சர்க்கா ஒவ்வொரு ஊரிலும் எல்லா வீட்டிலும் சுழற்றப்படலாம். சமையல் செய்கையிலும் குழந்தைக்குப் பால் கொடுக்கையிலும் தாய்மார்கள் கையினால் வேலைசெய்து பிழைக்கலாம். ஒரு சர்க்கா பல தலைமுறைகளாக வேலை செய்யும். இங்கிலாந்திற்குச் சென்று திரும்பியவர்களும், ஆங்கிலேயம் படித்த இந்தியரும், வக்கீல்களும், உயர் உத்தியோகஸ்தரும் தான் சர்க்காவிற்கு துரோகிகள். அவர்கள் இங்கிலீஷ்காரருக்குப் பிறந்தவர்கள்போல்நடிக்கிறார்கள்.(வெட்கம்). சுயமதிப்பு தேசாபிமானம் யாவற்றையும் இழந்த வெட்கங் கெட்டவர்தான் இவ்விதம் அயல் நாட்டாரைப் பழிப்பதுபோல் நடிப்பதும், சுதேசி சாமான்களை அலட்சியம் செய்வதுமாக விருக்கிறார்கள். மோட்டார் கார்கள் எல்லா தேசங்களிலு மிருக்கின்றன. இந்தியாவைத் தவிர வேறெல்லா தேசங்களும் அதனால் லாபமடைகின்றன. நம் தேசத்தவர் மோட்டார் வாங்கினால் அதன் ஒவ்வொரு காசும் வெளிதேசங்களுக்குப் போகின்றது. இத்தேசத்தில 1000 ரூபாய் வரும்படியுள்ளவர் கூடமோட்டார்வாங்குகிறார்கள்.இதன் ஆடம்பரம் நமக்கெதற்காக? 100க்கு 99 பேர்கள் பரம தரித்திரத்திலாழ்ந்திருக்கிறார்கள். இத்தலட்சணத்தில் இந்த ஆடம்பரம் எதற்காக?

நீங்கள் வெளியூர் துணி 32 ரூபாய்க்கு வாங்கினால அம்முழுப்பணமும் சீமைக்குப் போகிறது. கதர் 5 ரூபாயானால் அப்பணம் கிராமங்களுக்குச் சென்று பல ஏழைக்குடும்பங்களைக்காப்பாற்றுகிறது. இந்த ஊரில் கல் வண்டிகள் மனிதரால் இழுக்கப்பட்டதை நான் கவனித்தேன். இதன் பொருள் என்ன? மிருக வேலையை விட மனிதர் வேலைசெய்வதுலாபகரமாகவிருக்கிறது. முடிவாக இவ்வூர் மாணவர்கள் ஒவ்வொருவரும் கதர்கட்டுமாறு நான் கேட்டுக் கொள்ளுகிறேன். அவ்விதம் செய்தால் வருஷம் குறைந்தது 2 லட்சம் கதர் விற்பனையாகும்.

அகில இந்திய நூற்போர்சங்கத்தின் சார்பாக ஸ்ரீமான் என். எஸ். வரதாச்சாரியார் 20 லட்சம் ரூபாய் கதர்வேண்டுமானாலும் தயார் செய்யத் தாங்கள் தயாராக விருப்பதாகவும், நெய்த கதரை வாங்கத்தான் ஆட்கள் தேவை யென்றும், தமிழ்நாட்டுகதர்டிப்போவில் மாணவர்கள் ஏழைகளின் சௌகரியத்திற்காக சுலபமான ஒரு சீட்டுத் தயாரித்திருப்பதாகவும், அதை வாங்கினால் வருஷம் 30 ரூபாய் கதரும் ரூபாய்க்கு ½ அணா வீதம் கமிஷனும் கொடுக்கப்படுமென்றும் சொல்லி யாவரும் கதரைவாங்கி அதை நெய்யும் ஏழைகளைக் காப்பாற்றுமாறு கேட்டுக் கொண்டார்.

ஸ்ரீமான் ஸ்ரீநிவாசய்யங்கார் முடிவாகப் பேசியதில், கதர் என்றால் வறுமையை ஒழிக்கும் கருவியென்றும், அதனால் தேசியம், பொருளபிவிருத்தி, நல்வாழ்வு, ராஜீயமுன்னேற்றம், தேசாபிமானம் யாவும் ஏற்படுமென்றும், மாணவர்களை வெள்ளைக்காரரைப்போல் வாழக்கூடாதென்று சொல்லும்படி நடந்து கொள்வது வெட்க காமானதென்றும், யாவரும் கதரையே உடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு கூட்டத்தைக் கலைத்தார். மகாத்மா காந்திக்கு ஜேய் என்ற கோஷத்திடையே கூட்டம் கலைந்தது.

# மீண்டும் ஒரு யுத்தம் உண்டாகுமா?

[முன் தொடர்ச்சி]

இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய இரு தேசங்களின் அந்நிய நாட்டுக் கொள்கைகளில் முதலாவது இவ்விரு தேசங்களுக்கும் ஜப்பானுக்குமுள்ள சம்பந்தா சம்பந்தங்கள் இன்னதென்பதே முக்கியமாய்க் கவனிக்கப்பட வேண்டிய விஷயமாகும். ஜப்பான் மேல தேசத்தார் எல்லாராலும் கண்ணியமாய் மதிக்கப்பட்டும், அஞ்சப்பட்டும் வந்ததுண்டு. இதற்கு முக்கியமான காரணம் 1904-ம் வருஷத்தில் ருஷியா மீது இவர்களடைந்த வெற்றி மாத்திரமல்ல; அது முதல் இங்கிலாந்துடன் செய்து கொண்ட சிநேக உடன்படிக்கையும் விசேஷ ஹேதுவாகும். இவ்விதம் மேல் தேசத்தார் ஜப்பானியர்களைப்பற்றி விசேஷ மதிப்புள்ளவர்களாய் விளங்கியதின் பயனாய் ஜப்பானியர்களும் தாங்கள் கீழ் தேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை ஒருவாறு மறந்து மேற்றிசை நாகரீகத்தை அதிசீக்கிரத்தில் கைக்கொண்டு தங்களுக்குப் பக்கத்திலுள்ள அமெரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய தேசங்களின் விசாலமான பூமியில் தங்கள் ஜாதியாரைக் குடியேற்றிக் கொள்ள வழி யேற்படக்கூடுமென்று எதிர் பார்த்தார்கள். இதற்காக மேல் தேசங்களோடு விசேஷ வியாபார சம்பந்தம் வைத்துக் கொண்டதுமன்றி மேல் தேச ஸ்திரீகள் பலரை விவாஹம் செய்து கொள்வதான வழக்கமும் சாதாரணமாயிற்று.

நம்மவர்களில் சிலர் கொஞ்சம் வாசித்தவுடன் நாகரீகம் தலைக்கேறி நடை உடை, பெயர் இவைகளெல்லாம் ஐரோப்பிய பாவனைக்குச் சரியாய் மாற்றிக்கொள்வதுபோல ஜப்பானியரும் தங்களை ஐரோப்பிய வல்லரசுகளில் ஒன்றெனஎண்ணி கீழ்தேசங்களோடு சேர்ந்து கொண்டு சீனா தேசத்தவருக்கிழைக்கப்பட்ட பல தீங்குகளுக்கும் உடன் பங்காளியாய் விளங்கி வந்தனர். அதைப்பற்றி பல பத்திரிகைகளில் விசேஷ கிருபர்கள் ஜப்பான் தனது பிறப்பை மறந்து அந்நியர்களோடு சேர்ந்து சீனாவைத் துன்புறுத்துவதில் ஈடுபட்டிருப்பது ஜப்பானுக்கே ஆபத்தாக முடியுமென்றும், சீனாவுடன் சமாதானமாயும், சிநேகமாயுமிருந்து சீனாவை நல்ல ஓர் ஸ்திதிக்குக் கொண்டு வரப் பாடுபடுவதே ஜப்பானுக்குப் பெருமையாயும், அனுகூலமாயும் இருக்குமென்றும் பல சமயங்களில் எச்சரிக்கை செய்து வந்தனர். ஜப்பானோ இவ்வித எச்சரிப்புகளை அவமதிப்பாகவே மதித்து வந்தது. இவ்விதமிருக்க ஜப்பானியர்களின் ஜன விருத்தியைக்கவனித்த அமெரிக்கர்களும் அதற்கடுத்த பிரதேசத்திலுள்ளவரும் ஜப்பானியர்கள் தங்கள் நாடுகளில் குடியேறுவதைப் பற்றி ஆக்ஷேபனை பண்ணியும் இவ்வித பிரவர்த்தியைத் தடுப்பதற்கான சட்டமியற்றவும் தலைப்பட்டனர். இவ்வித உணர்ச்சி வேறெந்த தேசத்தவரிடத்திலும் காணப்பட்டதை விட அமெரிக்கர்களிடமே அதிக வெளிப்படையாகக் காண்பெற்றது. எனவே அமெரிக்கருக்கும், ஜப்பானியருக்கும் பசிபிக் சமுத்திரத்தில் ஓர் பெரிய கடல் யுத்தம் ஏற்படக்கூடியதாயிருக்குமென்று பலர் பல சமயங்களில் அபிப்பிராயம் வெளியிட்டும், பத்திரிகைக் கெழுதியும் வந்தனர் என்ற போதிலும் இங்கிலாந்தின் துணை தனக்கிருப்பதால் அமெரிக்கா தன்னோடு யுத்தம் செய்ய தைரியப்படமாட்டாதென்றும், ஒர்க்கால் யுத்தத்திற்கு வந்தாலும் கூட இங்கிலாந்தின் உதவியைக் கொண்டு அமெரிக்கர்களை சுலபமாய் வென்று விடலாமென்றும் தைரியமும், நம்பிக்கையும் உண்டாயிருந்தது. ஆயினும் சென்ற ஐரோப்பிய யுத்தத்திற்குப் பின் இவ்வித நிலைமையில் மாறுதலேற்பட்டு விட்டது. இதன் முன் பசிபிக் சமுத்திரப் பாதுகாப்புக்கு ஜப்பான் இங்கிலாந்தின் காவற்காரனாய் நியமிக்கப்பட்டிருந்தது. சமீபத்திலோ அவ்வித ஷரத்துக் கண்டுள்ள உடன்படிக்கை ரத்துச் செய்யப்பட்டுகீழ் திசைக் கடற்படை ஒன்றேற்படுத்த சிங்கப்பூரில் கடற்படை ஸ்தாபனம் ஒன்றை பல லக்ஷக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து இங்கிலீஷ்காரர் அமைத்துக் கொண்டிருக்கின்றனர். தவிரவும் அமெரிக்காவுடன் இங்கிலாந்து விசேஷ உடன்படிக்கை சம்பந்தமும் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது. ஆகவே ஆங்கிலேயர் ஜப்பானை மறந்து அமெரிக்காவை அதன் ஸ்தானத்தில் தங்களுக்குத் துணையாகக் கொண்டிருக்கின்றனர் என்பது தெளிவு. விளக்கொளியை புஷ்பம் என்றெண்ணி மயங்கிய விட்டில் சிறகை எரியக் கொடுத்த பின் அறிவடைவதுபோல ஜப்பானியரும் இப்பொழுது தான் யதார்த்த நிலைமையைக் கண்டுபிடித்திருக்கின்றனர். ஏனென்றால் தற்காலம் சீனாவில் சில மாதங்களாய் நடந்து கொண்டிருக்கும் அந்நிய பகிஷ்கார விஷயமாய் ஐரோப்பிய தேசத்தவர்கள் ஏற்கனவே சீனாவோடு யுத்தம் ஆரம்பித்து அநேக பெரிய தெண்டத்தை அத்தேசத்தின் மீது சுமத்தியிருப்பார்கள் என்பதை பலர் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஆயினும் ஏன் அப்படிச் செய்ய முடியவில்லை யென்றால் தங்களுடைய கீழ்த் திசை சேவகப் பெருமான் ஜப்பான், மீர் ஜாபர் நடுச் சமையத்தில் கிளைவுடன் போய்ச் சேர்ந்ததுபோல் சீனாவுடன் சேர்ந்து விடுமோ என்ற பயத்தாலும், சந்தேகத்தாலுமேயாம். ஏனென்றால் ஜப்பான், ருஷியா, சீனா ஆகிய மூன்று தேசங்களுக்கும் ஓர்வித உடன்படிக்கை ஏற்பட்டிருப்பதாகப் பிரஸ்தாபம் இருந்துவருகிறது. இச்சீன தேசங்கள் மறுத்துக் கூறினும் சீனாவில் ஏற்பட்டிருக்கும் காண்டன், பீக்கிங் ஆகிய இரு கவர்ன்மெண்டுக்குமுள்ள போரில் காண்டன் கவர்னமெண்டார் யுத்தத்திலாவது, சமாதானத்திலாவது முழு ஆதிக்கத்தை அடையும் போது தான் இம் மூன்று தேசங்களின் ஒற்றுமையும், உலகில் இனிமேல் ஏற்படும் யுத்தத்தில் இச்சேர்க்கையால் ஏற்படும் சாதக பாதகங்களும் தெளிவாய் எடுத்துரைக்கக்கூடிய நிலைமைக்கு வரும்.

இதனிடையில் இங்கிலாந்துக்கும், சீனாவுக்கும் யுத்தம் ஆரம்பித்து விடும் படியான நிலைமை ஏற்பட்டுவிட்டதாக இங்கிலாந்தின் மாஜி மந்திரி லாயிட் ஜியார்ஜ் சமீபத்தில் அபிப்பிராயக் கூறியிருக்கிறார். அவ்விதமாயின் இதர தேசங்களின் நிலைமை இது சம்பந்தமாய் எவ்வித மாறுதலடையக் கூடுமென்பதைக் கவனிப்போம்.

(தொடரும்)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

நாடார்குல மித்திரன் அனுபந்தம்.

# நாடார் மகாஜனங்களுக்கு ஓர் வேண்டுகோள்.



ஐயன்மீர்!

நமது நாடார் மகாஜனங்களுக்கு நாடோறும் நன்கு உழைத்து வருபவைகளில் நாடார் குல மித்திரன் தலையாயது என்பதுண்மை.

நாடார் மகாஜனசங்கத்திற்கும் இதுவரையும் வலது புயமாயிருந்துவந்திருக்கிறது, இன்னும் வரக்கூடும். நாடார் மகாஜன சமூகத்திற்கு விசேஷ சக்தியை அது உண்டுபண்ணியிருக்கிறது. நமது நாட்டின் ராஜீய தேசிய வேலைகளிலும் தம் சக்திக்கேற்றவாறு வேலையும் செய்திருக்கிறது.

நாடார் மகாஜன சங்கம் ஏழை மாணவர்கள் சகாய நிதி லாட்டரிக்கு பேருதவி செய்து வந்திருக்கிறது. எட்டு வருஷங்களில் எக்காரணம்பற்றியும் தவறுமல் வெளியிடப்பட்டும் வந்திருக்கிறது. இன்னும் அநேக நன்மைகள் அதனுல் ஏற்படுமென்று நம்புகிறோம்.

அமிழ்தினுமினிய செஞ்சொற்குழவி யோ
இமிழ்திரைப்பாவை ஈன்றிடும் முத்தோ
குமிழ்திரை கொணர்ந்த கோதிலா வமுதோ
தமிழ்மணம் வீசுந் தாரணித்திலக மோ,

என இன்னும் பலரும் பாடிப் பரவசமடைவதற்கேற்ப விருத்தியுண்டாக வேண்டிய உதவி ஈனவது எல்லோரும் செய்ய வேண்டிய தவசியமேயாம்.

இதன் ஆசிரியர் ஸ்ரீமான் சூ. ஆ. முத்து நாடார் மிகுந்த குலாபிமானத்துடன் தம் சொந்த வர்த்தக முயற்சிக்கிடையில் இவ்வரிய காரியத்தை சமூக ஊழியமாகச் சளியா உழைப்புடன் நடத்தி வந்திருக்கிறுர்! வருகிறுர்!! வருவார்!!!

சுமார் எட்டு வருஷங்களாக இதை நடத்துவதில் பல கஷ்ட நஷ்டங்களடைந்த காலத்திலும் அவர் குடும்பத்தில் மனம் வருந்தத்தக்க எதிர்பாராத இரண்டு சம்பவங்கள் நேர்ந்த காலத்திலேயும் சோர்ந்து பத்திரிகை வெளியிடுவதை நிறுத்தவில்லை.

நாடார் மகாஜனசங்கம் நாலாவது கான்பரன்ஸில் சங்கத்திலிருந்து ஒரு பத்திரிகை நடத்துவதாகச் செய்த தீர்மானத்தை அவரே நிறைவேற்றி அனுட்டானத்திலும் நடத்தி வருகிறுர்.

எவ்வளவு வைராக்கியசித்தமிருந்தாலும் பத்திரிகை நடத்துவதற்கு பொருளில்லையானல் இடையில் நின்றேபோகும். அப்படி நம்மில் எத்தனையோ பத்திரிகைகள் நின்றிருக்கின்றன.

இது என்றுங்குன்றுதிலங்குவதற்கு ஓர் பண்டு வேண்டுமென்ற பலருடைய ஆலோசனைப் பிரகாரம் அவரால் ஏற்படுத்தப்பெற்ற "நாடார் குல மித்திரன்" க்ஷேமநிதித் தர்மப்பண்டு லாட்டரி பிரைஸுக்கு நாடார் மகாஜனங்கள் யாவரும் அதிகமாகச் சீட்டு விற்று உதவி செய்யும் வண்ணம் கேட்டுக்கொள்கிறேன்.

இங்ஙனம் தங்களன்புள்ள

பா. ம. பாண்டிய நாடார்,
காரியதரிசி, நாடார் மகாஜன சங்கம்,
மதுரை.

(3-ம் பக்கத்தின் தொடர்பு)

கூற முடிந்தது. மணிக்கொரு தரம் கப்பல் தலைவர் கூறுவதை அவர்களிடம் சென்று தெரிவித்தேன். இம்மாதிரி கிடைத்த சிநேகம் எனக்கு நல்ல சமயத்தில் உதவியாகவிருந்தது. அதன் விவரம் பின்னுல் தெரியும்.

கப்பல் டிசம்பர் 18 அல்லது 19-ந் தேதி டர்பன் துறைமுகத்தில் நங்கூரம் போட்டது. காதெரி என்ற கப்பலும் அன்றே வந்தது.

ஆனல் உண்மையான புயல் இனிமேல்தான் தோன்ற வேண்டியிருந்தது.

## துணுக்குகள்.

ஸ்காட்லாந்தில் வேவர்லி, எடின்பர்க் என்ற இரண்டும் பெரிய ரயில்வே ஸ்டேஷன்களாம். வ்வொன்றும் 20ஏக்கர் நில விஸ்தீரணத்தை அடைத்துக் கொண்டிருக்கிறதாம். ஒரு நாளைக்கு சுமார் 100 ரயில்வண்டிகள் வருகிறதும் போகிறதுமாயிருக்கின்றனவாம். பிரயாணிகள் நிற்பதற்காகப் போடப்பட்டிருக்கும் திண்ணை (பிளாட் பாரம்) சுமார் ஒரு மைல் நீளமிருக்கிறதாம்.

* *

மெலிவும் உயரமும் பொருந்திய ஒருவன் தடிப்பும் கட்டையுமுள்ளவனைவிட அதிகமாகச் சாப்பிடுகிறுன் என்று ஜப்பான் டாக்டர் ஒருவர் கூறுகிறுர். ஒருவனுடைய ஆகாரம் நிறையைப் பொறுத்ததல்லவென்றும் உடம்பின் சுற்றளவைப் பொறுத்ததென்றும் கூறுகிறுர்.

• •

நயகரா அருவியினுல் கிடைக்கும் ஹைட்ரோ எலக்டிரிக் சக்தி எவ்வளவென்றுல் 4 கோடி 50 லக்ஷம் மனிதர்களின் சக்தியாம், அதாவது பிரிட்டிஷ் ஐக்கிய நாட்டிலுள்ள பலவான்களின் சக்திக்கும் அதிகமாம்.

• •

400 வயதுள்ள ஆரஞ்சி மரங்கள் இருக்கின்றனவாம். ஆனல் 100 வருஷத்துக்கு மேல் பலன் கொடுக்காது. 50 வருஷத்திலிருந்து 80 வருஷம் வரைதான் சரியானபடி பலன் கொடுக்கிறது. ஒருமரத்தில் சுமார் 1000 காய்கள் வரை காய்க்கின்றனவாம். பெரிய மரங்கள் 1500 காய்கள் கூடக்கொடுக்குமாம். போன வருஷம் இலங்கைக்கு சுமார் 400 கோடி பழம் இறக்குமதி செய்ததாம்.

• •

எம். கோசே என்னும் பிரஞ்சுக்காரர் ஒரு விநாடியில் 300 புகைப்படங்கள் எடுக்கக்கூடிய ஒரு கருவியைக் கண்டு பிடித்திருக்கிறுர்.

• •

எறும்பு ஒன்று தன்னைவிட 8000 மடங்கு கனமான பொருளைத் தன் தாடையினுல் கௌவிக்கொண்டு நடக்குமாம். மனிதன் தன் உடலின் அளவுக்கு இத்தகைய காரியம் செய்ய வேண்டுமானுல் தன் பற்களால் 275 டன் நிறை தூக்கவேண்டுமாம்!